டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 21.06.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 004 - Madurai | Online Edition

# தமிழகத்தில் 6 மாவட்டங்களில் கனமழைக்கான வாய்ப்பு!

சென்னை, ஜுன் 20

தமிழகத்தில் நீலகிரி, தேனி உள்ளிட்ட 6 மாவட்டங்களில் இன்று (ஜுன் 21) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வடக்கு கேரள பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல காற்றழுத்த சுழற்சி நிலவுகிறது. வடக்கு லட்சத்தீவு மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல காற்றழுத்த சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் இன்றும் (ஜுன் 21), நாளையும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள், வட தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

இன்று, திருநெல்வேலி மாவட்டத்தின் மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி, கோவை, திண்டுக்கல், தேனி, கன்னியாகுமரி மாவட்டங் களிலும், 22-ம் தேதி கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி, திண்டுக்கல், தேனி, மதுரை, சிவகங்கை மாவட்டங் களிலும் ஒரு சில இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழக கடலோர பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் இன்றுமுதல் ஜுன் 24-ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 60 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதி களுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என எச்சரிக்கப்படுகிறார்கள்.

# உர கட்டுப்பாட்டு சட்ட விதிமீறலுக்கு 23 உர விற்பனை நிலையங்களுக்கு தற்காலிக விற்பனை தடை



அரியலூர், ஜுன் 20

அரியலூர் மாவட்டத்தில், மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் உலகம்மை முருகக்கனி அறிவுரையின்படி வேளாண்மை உதவி இயக்குனர் தர கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் மற்றும் வேளாண்மை அலுவலர் தர கட்டுப்பாடு, அருள்மாறன் ஆலோசனைப்படி அரியலூர் மற்றும் செந்துறை வட்டார பகுதியில் புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு மதியழகன் மற்றும் வேளாண்மை அலுவலர் அடங்கிய குழு, ஜெயங்கொண்டம், ஆண்டிமடம் வட்டார பகுதியில் மதுரை மாவட்ட வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு, பரமேஸ்வரன் மற்றும் அவருடன் வேளாண்மை அலுவலர் குழு, மற்றும் தா.ப்பலூர், திருமானூர் வட்டாரத்தில் திருவள்ளூர் மாவட்ட வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு, ரமேஷ் மற்றும் வேளாண்மை அலுவலர் குழு, கடந்த மூன்று நாட்களாக அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டார பகுதியில் உரம் விற்பனை நிலையங்களை ஆய்வு செய்தார்கள்.




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

இந்த ஆய்வில் உர கட்டுப்பாட்டு சட்டம் 1985ன் படி விதிமீறலுக்கு உள்ளன 23 உரம் விற்பனை நிலையங்களுக்கு தற்காலிக விற்பனை தடை விதிக்கப்பட்டது என்றும் அரியலூர் மாவட்டத்தில் பல்வேறுபட்ட வகையில் பலமுறை உரக் கட்டுப்பாட்டு சட்டம் மற்றும் விற்பனையாளர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்து பலமுறை செய்தித் தாள்களில் வெளியிட்டும் மாவட்ட இன்புட் குழு whatsapp-க்கும் தினசரி தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் திடீர் ஆய்வின் போது மாவட்டத்தில் உள்ள விற்பனை நிலையங்கள் சில உரக்கட்டுப்பாட்டு சட்டத்தை மீறி செயல்படுவது மிகவும் தவறு என்றும், இனிமேல் எப்பொழுதும் உர விற்பனையாளர்கள் எப்போதும் உரக்கட்டுப்பாட்டு சட்டத்தின் படி நடந்து கொள்ள வேண்டும் என்றும், உரம் விற்பனை யாளர்கள் உரங்களை எப்போதும் விவசாயிக்கு ஆதார் கார்டு மூலமாக பி ஓ எஸ் இயந்திரத்தின் மூலமே விற்பனை செய்ய வேண்டும்.

விற்பனையின் போது விவசாயிகளுக்கு விவசாயிகளின் முகவரி, அவருடைய தொலைபேசி எண்ணுடன் கண்டிப்பாக விற்பனை ரசீது கொடுக்க வேண்டும். மூட்டையில் உள்ள விலையில் விற்பனை செய்ய வேண்டும்.

ஒரே உரங்கள் மூட்டையில் வெவ்வேறு விலையில் இருப்பை தனித்தனியாக வைத்திருந்து விவசாயிகளிடம் மூட்டையில் உள்ள விலையில் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

உரங்களை விவசாயிகளின் நிலம் மற்றும் பயிருக்கு ஏற்ப அறிந்து உரங்களை விவசாயிகளுக்கு ஆதார் கார்டு கொண்டு பி ஓ எஸ் எந்திரத்தின் மூலம் விற்பனை செய்ய வேண்டும் ஒரே விவசாயின் பெயரில் உரங்களை பட்டியலிட கூடாது.

ஒரே விவசாயிக்கு அவரின் வயல் பயிருக்கு அதிகமாக உரங்களை விற்பனை செய்யக்கூடாது மற்றும் உரங்களின் மூட்டியில் உள்ள விலையிலேயே விற்பனை செய்ய வேண்டும் என்றும் வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## ஊட்டச்சத்து பானங்கள்

**எலுமிச்சை சாறு**

**தேவையான பொருட்கள்**

எலுமிச்சை – 2

சர்க்கரை – 3–4 தேக்கரண்டி (சுவைக்கு ஏற்ப)

தண்ணீர் – 2 கப்

புதினா இலைகள் – சிறிதளவு (விருப்பப்பட்டால்)

ஐஸ் கட்டிகள் – சிறிதளவு (விருப்பப்பட்டால்)

**செய்முறை**

1.எலுமிச்சையை பிழிந்து சாறு எடுக்கவும்.

2.ஒரு பாத்திரத்தில் தண்ணீர், எலுமிச்சை சாறு மற்றும் சர்க்கரை சேர்த்து நன்றாக கலக்கவும்.

3.சர்க்கரை கரையும் வரை கலக்கவும்.

4.புதினா இலைகள் மற்றும் ஐஸ் கட்டிகள் சேர்த்து பரிமாறவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

**நாளை தொடரும்...**



# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## நெல்லிக்காயிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

கோயம்புத்தூர், ஜுன் 20

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நெல்லிக் காயிலிருந் மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி 23.06.26 மற்றும் 24.06.26 ஆகிய இரண்டு நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

பயிற்சியானது அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், (பேருந்து நிறுத்தம் : வாயில் எண்.7, மருதமலை சாலை வழி) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும். கீழ்கண்ட உணவு பொருட்களை தயாரிப்பதற்கு பயிற்சி வழங்கப்படும்.

● நெல்லி பானங்கள் - பழ ரச பானம் மற்றும் தயார்நிலை பானம்

● நெல்லி ஜாம்

● தேன் நெல்லி, நெல்லி கேண்டி, நெல்லி மிட்டாய், பொடி மற்றும் துருவல்

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500 + GST 18%) பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. தொலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.



# விவசாயிகளுக்கு அறுவடைக்கு பின் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல் பற்றிய பயிற்சி




ஈரோடு, ஜூன் 20

ஈரோடு வட்டாரம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் கீழ் செயல்படும் வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் விவசாயிகளுக்கு அறுவடைக்கு பின் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல் பற்றிய பயிற்சி நடைபெற்றது. இது குறித்து ஈரோடு மற்றும் சென்னிமலை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சி.சசிகலா அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது, ஈரோடு வட்டாரம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, கீழ் செயல்படும் வட்டார தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா திட்டம்) மூலம் எலவமலை கிராமத்தில் விவசாயிகளுக்கு அறுவடைக்கு பின் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல் பற்றிய பயிற்சி நடைபெற்றது. இந்த பயிற்சியில் வேளாண்மை அலுவலர் ந.நிவேதா, வேளாண்மை துறையின் மூலம் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள் பற்றிய விபரங்களை தெளிவாக எடுத்துரைத்தார்.

கால்நடை பல்கலைக்கழகம் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஈரோடு முனைவர் ஆர்.யசோதை, மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருட்கள் தயாரித்தல் விபரங்களை தெளிவாக எடுத்துரைத்தார். வேளாண் அறிவியல் நிலையம், கோபிசெட்டிபாளையம், விஞ்ஞானி மா.சிவா, பசுந்தாள் பயிர்களை நடவு செய்து மண்ணின் வளத்தை இயற்கை முறையில் மேம்படுத்த வேண்டும், இரசாயன உரங்களின் பயன்பாடுகளை குறைத்து அங்கக உர பயன்பாட்டை மேம்படுத்த வேண்டும், மேலும் பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்த தாவர வழிப் பொருட்களை தயார் செய்து பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் மண் வளம் காக்கப்படும். மேலும் வாழைப் பூவில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களான வாழைப் பூ வடை மற்றும் வாழைப்பூ தொக்கு தயாரிக்கும் முறைகளை செயல்விளக்கமாக செய்து செயல்முறைகளை விளக்கமாக கூறினார். குமரகுரு வேளாண்மை கல்லூரி பேராசிரியர் முனைவர் கஸ்தூரி திலகம் (ஊட்டசத்து மேலாண்மைத் துறை) வாழைக்காய் கொண்டுகுழந்தைகளுக்கு தேவையான சத்து மாவு செய்வது பற்றிய முறைகள், வாழைப்பூவில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள், பாரம்பரிய நெல் வகைகளைக் கொண்டு அவல் வகைகள் செய்வது பற்றி தெளிவாக எடுத்துரைத்தார்.

மகிழம் இயற்கை பண்ணை, ஈரோடு கருப்பண்ணசாமி, சன்ன அரிசி நெல் இரகங்கள் மற்றும் மதிப்பு கூட்டல் செய்தல் போன்ற விபரங்களை விளக்கமாக கூறினார். உதவி விதை அலுவலர், அசோக்குமார், விதைப்பண்ணை அமைப்பதற்கான வழிமுறை களை தெளிவாக எடுத்துரைத்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.சா.கிருத்திகா, அட்மா திட்டங்களின் செயல்பாடுகள் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார்.

உதவி வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.செங்கோட்டையன் மற்றும் இ.வைஜெயந்தி, உழவன் செயலி மூலம் இடுபொருட்கள் பதிவு செய்யும் முறைகளை தெளிவாக எடுத்துரைத்தார்.



# நவீன வேளாண்மையில் லிச்சி பழ சாகுபடி

ஈரப்பதமும் மிதமான குளிர்ச்சியும் கொண்ட மிதவெப்ப மண்டலக் காலநிலையை வாழ்வாதாரமாகக் கொண்டது லிச்சி பழச்செடியாகும். சீனாவைத் தயாமாகக் கொண்ட இந்த சுவையான பழம். இந்தியா பீகார் மாநிலத்தில் மிக அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. அதனைத் தொடர்ந்து உத்தரப்பிதேசம், மேற்கு வங்கம், பஞ்சாப் மற்றும் அஸ்லாம் போன்ற வட இந்திய மாநிலங்களில் மட்டுமே இந்த சாகுபடி இருந்து வந்தது.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில், கொடைக்கானலில் மட்டுமே இதுவரை சோதனை முறையில் பயிரிடப்பட்டு ஓரளவு மகசூல் பெறப்பட்டிருந்தது.

### ஆட்சியரின் தொலைநோக்குப் பார்வை

லிச்சி பழ பயிர்ச் சாகுபடிக்கு ஏற்ற இயல்பான காலநிலை ஜவ்வாது மலையில் இல்லை என்ற போதிலும், இங்குள்ள தட்பவெப்ப மாற்றங்களைப் பயன்படுத்தி புதியதொரு முயற்சியை மேற்கொள்ள திட்டமிட்டார் அன்றைய மாவட்ட ஆட்சியர் கந்தசாமி. கடந்த 2019ம் ஆண்டு அவரது தொலை நோக்கு முயற்சியால், தோட்டக்கலைத் துறை மூலமாக அரசின் சிறப்புத் திட்டத்தின் கீழ் இதற்கான அனுமதி பெறப்பட்டது. பீகார் மாநிலத்திலிருந்து சுமார் எட்டாயிரம் தரமான லிச்சி பழக் கன்றுகள் கொள்முதல் செய்யப்பட்டு ஜவ்வாதுமலை வட்டார விவசாயிகளுக்கு விலையின்றி வழங்கப்பட்டன. பீகார் மாநிலத்தின் தட்பவெப்ப நிலையில் பொதுவாக மூன்று முதல் நான்கு ஆண்டுகளில் லிச்சி மரங்கள் பலன் தரத் தொடங்கி விடும். ஆனால், ஜவ்வாது மலையின் மாறுபட்ட காலநிலையின் காரணமாக எதிர்பார்த்த காலத்துக்குள் மரங்கள் பூக்கவில்லை. இதனால் ஏமாற்றமடைந்த சில விவசாயிகள் நான்கு ஆண்டுகள் பொறுத்துப் பார்த்துவிட்டு பலன் தராது என்றெண்ணி மரங்களை அழித்து விட்டனர்.

### ஏழு ஆண்டு காத்திருப்பு

இந்நிலையில் நம்பிக்கையை தளரவிடாமல் ஏழு ஆண்டு காலமாக மரங்களைத் தொடர்ந்து அரப்பணிப்போடு பராமரித்து வந்த விவசாயிகளுக்கு இப்போது பலன் கிடைத்துள்ளது.

ஜவ்வாது மலை மரங்களில் கொத்துக் கொத்தாக லிச்சி பழங்கள் விளைந்து குலுங்குவதைக் கண்டு மலையக விவசாயிகள் பெரு மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கொடை கானலுக்கு அடுத்தபடியாக தமிழகத்தில் ஜவ்வாது மலையிலும் லிச்சியை விளைவிக்க முடியும் என்பதை இவர்களின் உழைப்பு நிரூபித்துள்ளது.

இது குறித்து மகிழ்ச்சியோடு பேசும் தொம்பரெட்டிப் பகுதியைச் சேர்ந்த விவசாயி திருப்பதி, ஜவ்வாது மலையில் இந்த லிச்சி கன்றுகளை நட்டு ஏழு ஆண்டுகள் கண்ணும் கருத்துமாகப் பராமரித்து வந்ததாகக் குறிப்பிடுகிறார்.

இந்த ஆண்டு தங்களுக்குக் கிடைத்துள்ள முதல் மகசூல் மிகுந்த மனநிறைவை அளிப்பதாகக் கூறும் அவர் தற்போதைக்கு இருபதுக்கும் மேற்பட்ட விவசாயிகள் மட்டுமே இச்சாகுபடியில் ஈடுபட்டுள்ளதாகவும், இந்த ஆண்டு குறைந்த அளவே பழங்கள் கிடைத்ததால் உள்ளூர் சந்தையிலேயே கிலோ ரூ.150 முதல் ரூ.200 வரை விற்பனை செய்துள்ள தாகவும் தெரிவித்தார்.

வரும் ஆண்டுகளில் மகசூல் இன்னும் அதிகரிக்கும் என்பதால் இப்பழங்களை வெளிச்சந்தைகளுக்கு அனுப்பத் தேவையான வழிகாட்டுதல்களையும் உள்கட்டமைப்பு உதவிகளையும் அரசு தங்களுக்குச் செய்து தர வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.



### வெற்றியின் பின்னணி

தொடக்கத்தில் இத்திட்டத்துக்கான சாத்தியக்கூறுகள் குறைவாகவே இருந்ததாகக் குறிப்பிடும் தோட்டக்கலைக் துறை அதிகாரிகள் மலையகத்துக்கே உரிய தற்காலிகக் குளிர்ச்சியையும் காலநிலை மாற்றங்களையும் நம்பியே இந்தச் சோதனைக்களத்தில் இறங்கியதாகத் தெரிவிக்கின்றனர். மாவட்ட நிர்வாகத்தின் மூலம் ஜவ்வாதுமலையைச் சோந்த இருபது முன்னணி விவசாயிகள் இத்திட்டத்துக்காக தேர்வு செய்யப் பட்டனர். அவர்கள் பீகார் மாநிலம் முசாபர்பூரில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கீழ் இயங்கும் லிச்சி பழத்துக்கான தேசிய ஆராய்ச்சி மையத்துக்கு நேரடியாக அழைத்துச் செல்லப்பட்டு முறையான நவீனப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. அவ்வாறு பயிற்சி பெற்ற விவசாயிகளுக்கு கன்றுகள் வழங்கப்பட்டு அதிகாரிகளின் தொடர் ஆலோசனை யோடு பராமரிக்கப்பட்டதே இந்த வெற்றிக்குக் காரணம் என்று பெருமிதம் கொள்கின்றனர்.

### அரசுக்குப் பரிந்துரை

ஜவ்வாது மலைப் பகுதியிலும் தரமான லிச்சி பழங்களை வணிக ரீதியாக உற்பத்தி செய்ய முடியும் என்ற சாதனை இப்பகுதி விவசாயிகளுக்குப் புதிய பொருளாதாரப் பாதையைத் திறந்துவிட்டுள்ளது எனலாம். இந்தச் சாதகமான சூழலைத் தொடர்ந்து இப்பகுதியில் லிச்சி சாகுபடியை மேலும் விரிவு படுத்தவும், உற்பத்தியை மேம்படுத்தவும் தேவையான விரிவான திட்ட அறிக்கை மாவட்ட நிர்வாகத்தின் மூலம் விரைவில் அரசுக்குப் பரிந்துரைக்கப்பட உள்ளதாகத் தோட்டக்கலைத் துறையினர் தெரிவித்தனர்.

இத்திட்டத்துக்கு அரசு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து, முறையான ஊக்கத்தொகையும் குளிரூட்டப்பட்ட சேமிப்புக் கிடங்கு உள்ளிட்ட வசதிகளையும் ஏற்படுத்தித்தரும் பட்சத்தில் ஜவ்வாதுமலையின் பொருளாதாரம் புதிய உச்சியைத் தொடும் என்பது நிச்சயம்.

தகவல் : ***T.யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை உதவி பேரராசியர், ஸ்ரீ சக்தி பொறியியல் கல்லூரி, கோவை.***

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# விவசாயத்தை அச்சுறுத்தும் பருவ மழை பற்றாக்குறை




இந்திய வானிலை ஆய்வு மையம் (RMD) இந்த ஆண்டிற்கான பருவமழை பற்றி எச்சரிக்கை அண்மையில் விடுத்துள்ளது. தற்போது நிலவும் சூப்பர் எல் நினோ சூழலால் இந்த ஆண்டு தென்மேற்கு பருவ மழை அதனுடைய நீண்ட கால சாராசரி அளவில் 90% மட்டுமே இருக்குமென கணிக்கப்பட்டுள்ளது.

**சாகுபடி நிலவரம்**

நம்முடைய மொத்த சாகுபடி பரப்பில் ஏறக்குறைய 45% வானம் பார்த்த பூமியாக மழையை நம்பி தான் சாகுபடி பணி மேற்கொள்ள வேண்டும். பருவ மழை பற்றாக்குறை என்பது மிகப்பெரிய பொருளாதார அச்சுறுத்தலாகவே பார்க்கப் படுகிறது.

**தென்மேற்கு பருவமழையின் தாக்கம்?**

தற்போதைய அச்சத்தைப் புரிந்து கொண்டு தென்மேற்கு பருவ மழையின் தாக்கத்தை முதலில் பார்ப்போம். ஆண்டு சாரசரியாக 118 செ.மீ. நாட்டின் மொத்த பகுதியில் 75% பங்களிக்கிறது. இந்த சூழலில் சாரசரி மழையில் 10% மேலாக பற்றாக்குறையாக ஏற்படும் போது அது வேளாண்மை வளர்ச்சியில் பெரிய சரிவை ஏற்படுத்தும்.

**கடந்த கால புள்ளி விபரம் என்ன?**

1990 முதல் 2024 வரையிலான 35 ஆண்டுகளில் இந்தியாவில் 18 முறை இயல்பை விட குறைவான மழை பெய்துள்ளது.

அதாவது ஏறத்தாழ 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை பருவ மழை பொய்க்கிறது. 35, ஆண்டுகளில் 14 முறை மட்டுமே கூடுதலாக மழை பொழிவு பதிவாகியுள்ளன.

**மழை பொழி பற்றாக்குறையால் என்ன நிகழும்?**

சாகுபடி பரப்பு வழக்கத்தைவிட சுருங்கி போய்விடும். இந்தியாவின் காரீப் பருவ தன்மையே மாற்றி அமையும். அதிக எண்ணிக்கையிலான மாவட்டங்களில் கணிசமாக மழை குறையும் போது மொத்த சாகுபடி பரப்பும் குறையும்.

பருவம் பட்டம் தவறினால் விளைச்சல் நஷ்டமாகும். சாகுபடி பரப்பும் மகசூலும் ஒரே நேரத்தில் வீழ்ச்சியடைவதால் மொத்த உற்பத்தியில் பெரும் பாதிப்பைச் சந்திக்கிறது.

**மாற்று வழிகள் உண்டா?**

இருக்கின்ற நீர்ப்பாசன கட்டமைப்புகளை வலுவான தகவமைப்பாக மாற்றி நவீன தொழில்நுட்பங்களை பயன் படுத்தி சொட்டுநீர் பாசனம், தெளிப்புநீர் பாசன கட்டமைப்பை உருவாக்க வேண்டும்.

இதற்கு மத்திய அரசு (PMKSY) திட்டத்தின் கீழ் சிறு, குறு விவசாயிகளுக்கு 100% மானியமும், இதர விவசாயிகளுக்கு 75% மானியமும் வழங்கப்படுகிறது. இந்த முறையில் ஏறத்தாழ 80 வகையான பயிர்களை சாகுபடி செய்யலாம்.

மரங்களை நடுவோம்! மழை பெறுவோம்!!.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# எண்ணெய் வித்து பயிர்களில் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள்




சேலம், ஜுன் 20

சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரம், கல்பாரப்பட்டி கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் எண்ணெய் வித்து பயிர்களில் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி தலைமை தாங்கி விவசாயிகளுக்கு மண் பரிசோதனை, மண் வள அட்டைகள், இயற்கை விவசாயம், உரங்களின் சமச்சீரான பயன்பாடு மற்றும் நீர் சேமிப்பு நுட்பங்கள், பசுந்தாள் உரம் இடுதல் மற்றும் விவசாய அடையாள எண் பற்றி வரிவாக எடுத்து கூறினார்.

நிலக்கடலை, எள், ஆமணக்கு மற்றும் சூரியகாந்தி பயிர்களின் சரியான பருவம், மேம்படுத்தப்பட்ட ரகங்களை பயன்படுத்துதல், விதை நேர்த்தி, விதைக்கும் முறை மற்றும் இடைவெளி, ஒருங்கிணைத்த உர மேலாண்மை, ஜிப்சம் இடுதல், ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை, அறுவடை மற்றும் அறுவடை பின்செய் நேர்த்தி ஆகிய தொழில்நுட்பங்கள் உரிய செயல்விளக்கத்துடன் எடுத்து கூறப்பட்டது.

ஓய்வு பெற்ற துணை வேளாண்மை அலுவலர் கே.பழனிசாமி சிறப்பு பயிற்சியாளராக கலந்து கொண்டு பயிற்சி அளித்தார்.



டி.விரிடி என்ற உயிரியல் பூஞ்சான கொல்லி கொண்டு நிலக் கடலை விதை நேர்த்தி செயல்விளக்கம் செய்து காண்பிக்கப் பட்டது.

கலந்து கொண்ட 40 விவசாயிகளுக்கு பயிற்சி ஊக்கதொகை மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது.

துணை வேளாண்மை அலுவலர் (பொ) ப.மூர்த்தி, வட்டார தொழில்நுட்ப மேலாளர் கே.ராஜேந்திரன், உதவி வேளாண்மை அலுவலர் ச.தனபால், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சி.சரஸ்வதி மற்றும் தீபன் முத்துசாமி கலந்து கொண்டனர்.



# 'நாட்டுக்கோழி வளர்ப்பு - குறைந்த முதலீடு நிறைந்த லாபம்'



திருச்சி, ஜூன் 20

தமிழக அரசின் நிதியில், திருச்சி, துவாக்குடியில் அமைந்துள்ள பாசன மேலாண்மை பயிற்சி நிலையத்தின் தலைமை இயக்குனர் எஸ்.ராஜாவின் வழிகாட்டுதலின்படியும் மற்றும் இணை இயக்குனர் எஸ்.இலக்குவ பூபதியின் தொழில்நுட்ப ஆலோசனைபடியும் அரியலூர் மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள் பயன்பெறும் வகையில் 'நாட்டுக்கோழி வளர்ப்பு - குறைந்த முதலீடு நிறைந்த லாபம்' குறித்த பயிற்சி சோழமாதேவியில் 19.06.26 அன்று நடைபெற்றது. கிரீடு வேளாண் அறிவியல் மையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் தலைமை யேற்றார். பாசன மேலாண்மை பயிற்சி நிலையத்தின் உதவிப் பேராசிரியர் சி.கிறிஸ்டல் கோரெட் தொடக்க உரையாற்றினார்.

இப்பயிற்சியில் நாட்டுக்கோழி வளர்ப்பின் முக்கியத்துவம், நோய் மற்றும் சுகாதார மேலாண்மை பற்றிய விளக்கத்தை கால்நடை தொழில்நுட்ப வல்லுனர் வெ.சரண்யா, தீவன மேலாண்மையை பற்றிய விளக்கத்தை கால்நடை உதவி மருத்துவர் மா.மகேந்திரன் எடுத்துரைத்தனர். மேலும், கோழி கழிவுகளை பயன்படுத்தி இலாபத்தை அதிகரிக்கும் புதிய தொழில்நுட்பங்களை பற்றி முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் கோ.அழகு கண்ணன் விரிவாக எடுத்துரைத்தார். பாசன மேலாண்மை பயிற்சி நிலைய இணைப் பேராசிரியர் சி.இராஜேஷ்வரியின் வழிகாட்டுதலோடு இணை ஆராய்ச்சியாளர்கள் ரெ.ரமா பிரபா நளினி மற்றும் எம்.அருணா தேவி ஆகியோர் பயிற்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தனர்.

# வேளாண் சூழலியல் பகுப்பாய்வு நெற்பயிரில் சூழலியல் கட்டமைப்பு குறித்த பண்ணைப்பள்ளி




மதுரை, ஜூன் 20

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் வட்டாரம் வேளாண்மைத் துறையின் கீழ் இயங்கும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் தனிச்சியம் உட்கடை செம்புக்குடிபட்டி கிராமத்தில் விவசாயிகளுக்கு வேளாண் சூழலியல் பகுப்பாய்வு நெற்பயிரில் சூழலியல் கட்டமைப்பு குறித்த பண்ணைப்பள்ளி நடைபெற்றது.

இப்பண்ணைப்பள்ளியில் நெற்பயிர் சாகுபடி செய்யும் 25 முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

அலங்காநல்லூர் வட்டார வேளாண்மை தொழில்நுட்ப முகமை திட்ட ஒருங்கிணைப்பாளர் / வேளாண்மை உதவி இயக்குநர் அலங்காநல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் பெ.தெய்வேந்திரன் விளைநிலம் பாதுகாப்போம் இயக்கம் கேத் பச்சோ அபியான இயக்கத்தின் மூலம் இயற்கை விவசாயம் மற்றும் மண்வள பாதுகாப்பு விவசாயிகள் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு முகாமில் எடுத்துக் கூறியதாவது சமச்சீரான உரப்பயன்பாட்டை மேற்கொள்வதன் மூலம் நிலையான வேளாண்மையை ஊக்குவித்தல், மண் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல், மண்வளம் மற்றும் சமச்சீரான உரப்பயன்பாட்மை மேற்கொள் வதன் மூலம் சாகுபடி செலவை குறைப்பது, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது, பசுந்தாள் உரப்பயன்பாடுகள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

இப்பள்ளியில் மதுரை மாவட்ட வேளாண்மை அறிவியல் நிலைய முதுநிலை மூத்த விஞ்ஞானி பேராசிரியர் மற்றும் தலைவர் டாக்டர்.மு.சுரேஷ் கலந்து கொண்டு பயிர்களை தாக்கும் பூச்சி மற்றும் நோய்களை அடையாளம் காணுதல்,

அதனை கட்டுப்படுத்தும் முறைகள், வயலில் காணும் நன்மை செய்யும் பூச்சிகளை பாதுகாத்தல், வயல்வெளிகளில் விளக்கு பொறி வைத்தல், இனக்கவர்ச்சி பொறி வைத்தல், டி வடிவ குச்சிகள் வைத்தல், பயிர் பொருளாதார சேத நிலைகளுக்கு அதிகமான நிலையில் இயற்கை பூச்சிக் கொல்லிகளை பயன்படுத்துதல், இரசாயன உரங்களை பகிர்ந்தளித்தல், வரப்புகளில் உளுந்து, பச்சைப்பயிறு, தட்டைப்பயறு போன்றவை சாகுபடி செய்தல், பயிர் சுழற்சி முறைகள் கையாளுதல் போன்ற இயற்கை சூழலை பாதுகாக்கும் முறைகளுடன் சாகுபடி செய்தல் அவசியம் என்பதை தெளிவாக எடுத்துரைத்தார். மேலும் நெற்பயிரில் கோனோவீடர் மூலம் களை நிர்வாகம், இலைவண்ண அட்டை கொண்டு தழைச் சத்தை தேவைக்கேற்ப பிரித்து இடுதல், நீர் மறைய நீர் கட்டுதல், நெற்பயிரில் பாக்டீரியா இலைக்கருகல் நோய் அதிகம் காணப்படு வதால் ஒருங்கிணைந்த பூச்சி நோய் நிர்வாக முறைகளான இயற்கை முறைகளான பஞ்சகாவ்யம், வேப்பங்கொட்டை கரைசல் தெளிப்பு, மஞ்சள் வண்ண அட்டை, விளக்கு பொறி, இனகவர்ச்சி பொறி அங்கக வேளாண்மை முறைகளை பயன்படுத்தி குறைந்த செலவில் அதிக மகசூல் பெற்று வருமானத்தை கூடுதலாக பெறு மாறு விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனை வழங்கினார். மேலும் மதுரை மாவட்ட வேளாண்மை அறிவியல் பேராசிரியர் டாக்டர் ஆனந்த் தரமான அரசு சான்று பெற்ற விதைகளை பயன்படுத்த வேண்டும் எனவும், தரமான விதைகளின் முக்கிய பண்புகள், விதை உற்பத்தி முறைகள், விதை முளைப்புத்திறன், அறுவடை மற்றும் சேமிப்பு, விதைச் சான்றிளிப்பு முறைகள், அங்கக சான்று விதை உற்பத்தி முறைகள், உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, உயிர் பூஞ்சான கொல்லிகளான டிரைக்கோடெர்மா விரிடி, சூடோமோனஸ் பயன்பாடுகள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

மேலும் உதவி வேளாண்மை அலுவலர் பால்பாண்டி விவசாயி களின் தனித்துவ அடையாள எண், பாரத பிரதம மந்திரி கிசான் நிதி திட்டம், நுண்ணீர்ப் பாசன திட்டம், மத்திய மாநில அரசின் மூலமாக கிடைக்கும் மானியத் திட்டங்கள் பற்றி எடுத்துக்கூறினார். பண்ணைப் பள்ளியின் முடிவில் நெற்பயிரில் வேளாண் சூழலியல் பகுப்பாய்வு நெற்பயிரில் சூழலியல் கட்டமைப்பு குறித்த தொழில் நுட்ப கருத்துக்கள் அடங்கிய பயிற்சி கையேடு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. பண்ணைப் பள்ளியில் கலந்து கொண்ட விவசாயி களுக்கும் தொழில்நுட்ப அலுவலர்களுக்கும் அலங்காநல்லூர் வட்டார தொழில்நுட்ப மேலாளர் வேல்முருகன் நன்றி கூறினார். பண்ணைப்பள்ளிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்கள் வசந்தி மற்றும் சௌந்தராஜன் ஆகியோர் செய்திருந்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்கள் மற்றும் மதிப்பு கூட்டுதல் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி



மதுரை, ஜூன் 20

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டாரம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை ATMA 2026 -27 ஆம் ஆண்டு விளாச்சேரி கிராமத்தில் அறுவடைக்குப்பிந்தைய தொழில் நுட்பங்கள் மற்றும் மதிப்பு கூட்டுதல் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி வேளாண்மை உதவி இயக்குனர் மீனாட்சி சுந்தரம் தலைமையில் நடைபெற்றது. அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்கள் மற்றும் மதிப்பு கூட்டுதல் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி பாரதப் பிரதமரின் 23வது கௌரவ நிதி உதவி மற்றும் விழிப்புணர்வு முகாம் மற்றும் விளைநிலம் காப்போம் Khet Bachao Abhiyan கேத் பச்சோ அபியான் இயக்கத்தின் மூலம் சமச்சீரான உரப்பயன்பாட்டை மேற்கொள்வதன் மூலம் நிலையான வேளாண்மையை ஊக்குவித்தல் மண் ஆரோக் கியத்தை மேம்படுத்துதல் குறித்தும் விளக்கம் அளித்தார்.

அன்ன வயல் காளிமுத்து அறுவடைக்குப்பிந்தைய தொழில் நுட்பங்கள் மற்றும் மதிப்பு கூட்டுதல் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி செயல் விளக்கத்துடன் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். வேளாண்மை அலுவலர் அருள் நவமணி விஜய பாரதி துறை சார்ந்த திட்டங்கள் மதிப்பு கூட்டுதல் மூலம் சிறு தானியங்கள் விற்பனை தொழில் நுட்பங்கள் வணிகம் செய்யும் முறைகள் குறித்தும் கூறினார். துணை வேளாண்மை அலுவலர் அழகேசன், விவசாய அடையாள அட்டை எண் பதிவேற்றம் செய்தல் துறை சார்ந்த மானியத் திட்டங்கள் குறித்து கூறினார். விளாச்சேரி கிராமம் மற்றும் அருகில் உள்ள கிராமங்களில் இருந்து விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். இம் மாவட்ட அளவிலான விவசாய பயிற்சி தொழில்நுட்ப மேலாளர் அழகர் மற்றும் மகா லட்சுமி ஏற்பாடு செய்திருந்தனர். இப்பயிற்சிக்கு ஏற்பாடுகளை செய்து வட்டார தொழில் நுட்ப மேலாளர் லதா நன்றியுரை வழங்கினார்.

# குறுவை சிறப்பு தொகுப்பு திட்டம் அமல் குறித்து வேளாண்மை இணை இயக்குநரின் வழிமுறைகள்

திருச்சி, ஜுன் 20

குறுவை நெல் சாகுபடி திட்டத்தில் மானியம் பெற விவசாயிகளுக்கு திருச்சிராப்பள்ளி, வேளாண்மை இணை இயக்குநர் அழைப்பு விடுத்துள்ளார்.

நெல் குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ், நடப்பு பருவத்தில் நெல் இயந்திர நடவு செய்துள்ள விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரம் ஊக்க தொகையாக அதிகபட்சம் 2 ஏக்கர் வரை மானியம் விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட உள்ளது.

மேலும், இந்த திட்டத்தில் விதை நெல், நெல் நுண்ணூட்ட கலவை மற்றும் உயிர் உரங்கள் மானிய விலையில் பயனாளிகளுக்கு வழங்கப்பட உள்ளது. எனவே, தற்போது நெல் இயந்திர நடவு அல்லது நேரடி விதைப்பு செய்துள்ள விவசாயிகள் இயந்திர நடவு மானியம் பெற இ-சேவை மையங்களில் பதிவு செய்ய வேண்டும்.

பதிவு செய்துள்ள விவசாயிகள் விண்ணப்பத்துடன் தங்களது ஆதார், சிட்டா, அடங்கல், வங்கி புத்தக நகல், இயந்திர நடவு செய்யப்பட்டுள்ள வயலின் போட்டோ (ஜியோ டேக்), விவசாயிகளின் பாஸ்போர்ட் சைஸ் போட்டோவுடன் தங்களது பகுதி அலுவலர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஆடு வளர்ப்பு பண்ணை பள்ளி நடந்தது

திருச்சி, ஜுன் 20

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டாரம் மருதூர் கிராமத்தில் வேளாண்மை துறை அட்மா திட்டத்தின் கீழ் லாபகரமான முறையில் செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு பண்ணை பள்ளி நடைபெற்றது. இதில் டாக்டர் நீலமேகம் அன்பில், கால்நடை உதவி மருத்துவர் பேசுகையில் ஆட்டின் வகைகள் மற்றும் ஆடு வளர்க்கும் போது கடைபிடிக்க வேண்டிய நடைமுறை தொழில்நுட்பங்கள் பற்றி விவசாயிக்கு விரிவாக விளக்கி கூறினார்.

மேலும் குடற்புழு நீக்கம் தீவன மேலாண்மை ஆடு கொட்டகை அமைத்தல் பற்றி விரிவாக விளக்கி கூறினார். அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சபரிச்செல்வன் பேசுகையில், அட்மா திட்டத்தில் செயல்படுத்தப்படும் பயிற்சிகள், கண்டுணர்வு சுற்றுலா, செயல்விளக்க திட்டங்கள் பற்றி விரிவாக விளக்கி கூறினார். இப் பண்ணை பள்ளியில் 30க்கும் மேற்பட்ட மருதூர் கிராம விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். பண்ணை பள்ளி ஏற்பாட்டினை உதவி தொழில்நுட்ப மேலாளர் கார்த்திக், உதவி வேளாண்மை அலுவலர் பிரவீன் ஆகியோர் செய்திருந்தனர்.



# காலநிலை மாற்றத்தின் கீழ் உணவுப் பாதுகாப்பிற்கான வேளாண் பொறியியல் தீர்வுகள்

காலநிலை மாற்றம் மற்றும் உணவுப் பாதுகாப்பு

உணவுப் பாதுகாப்பு என்பது அனைத்து மக்களும் எல்லா நேரங்களிலும் போதுமான, பாதுகாப்பான மற்றும் சத்தான உணவினைப் பெறும் நிலையாகும். ஆனால் காலநிலை மாற்றம் இதற்கு பல்வேறு அச்சுறுத்தல்களை ஏற்படுத்துகிறது.

**முக்கிய தாக்கங்கள்**

- பயிர் விளைச்சல் குறைதல்
- நீர்வள பற்றாக்குறை
- மண் வளம் பாதிப்பு
- பூச்சி மற்றும் நோய் தாக்குதல் அதிகரிப்பு
- உணவுப் பொருட்களின் விலை உயர்வு
- விவசாயிகளின் வருமான இழப்பு

இந்த சவால்களை சமாளிக்க நவீன வேளாண் பொறியியல் தொழில்நுட்பங்கள் அவசியமாகின்றன.

**உணவுப் பாதுகாப்பிற்கான வேளாண் பொறியியல் தீர்வுகள்**

**1. துல்லிய வேளாண்மை**

துல்லிய வேளாண்மை என்பது GPS, GIS, ட்ரோன்கள், சென்சார்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்ற தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி பயிர் மேலாண்மையை மேம்படுத்தும் முறையாகும்.

**நன்மைகள்**

- நீர் மற்றும் உரச் செலவு குறைதல்
- விளைச்சல் அதிகரிப்பு
- வளங்களின் திறமையான பயன்பாடு
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு

**2. நீர் மேலாண்மை தொழில்நுட்பங்கள்**

காலநிலை மாற்றத்தால் நீர் பற்றாக்குறை அதிகரித்து வருகிறது. இதனை சமாளிக்க நவீன நீர்ப்பாசன முறைகள் பயன்படுத்தப் படுகின்றன.

**முக்கிய தொழில்நுட்பங்கள்**

- சொட்டு நீர்ப்பாசனம்
- தெளிப்பு நீர்ப்பாசனம்
- மழைநீர் சேகரிப்பு
- தானியங்கி நீர்ப்பாசன அமைப்புகள்

**பயன்கள்**

- நீர் சேமிப்பு
- வறட்சி பாதிப்பு குறைதல்
- பயிர் உற்பத்தி அதிகரிப்பு

**3. பாதுகாக்கப்பட்ட சாகுபடி**

கிரீன்ஹவுஸ், பாலிஹவுஸ் மற்றும் நெட் ஹவுஸ் போன்ற அமைப்புகள் மூலம் காலநிலை பாதிப்புகளிலிருந்து பயிர்களை பாதுகாக்க முடிகிறது.

**நன்மைகள்**

- ஆண்டு முழுவதும் உற்பத்தி
- தரமான விளைபொருட்கள்
- அதிக வருமானம்
- இயற்கை பேரிடர்களிலிருந்து பாதுகாப்பு

**4. காலநிலை நுண்ணறிவு வேளாண்மை**

காலநிலை மாற்றத்திற்கேற்ப வேளாண்மை முறைகளை மாற்றியமைக்கும் தொழில்நுட்ப அணுகு முறையாகும்.

**முக்கிய அம்சங்கள்**

- வள சேமிப்பு
- கார்பன் வெளியேற்றம் குறைதல்
- நிலையான உற்பத்தி
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு

**5. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்பாடு**

வேளாண்மையில் சூரிய ஆற்றல் மற்றும் உயிரிசக்தி தொழில் நுட்பங்கள் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன.

**எடுத்துக்காட்டுகள் :** சூரிய சக்தி பம்புகள், சோலார் உலர்த்திகள், உயிரி வாயு நிலையங்கள்

**நன்மைகள்**

- எரிபொருள் செலவு குறைதல்
- கார்பன் வெளியேற்றம் குறைதல்
- நிலையான ஆற்றல் உற்பத்தி

**6. அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்கள்**

உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்களில் ஒரு பெரிய பகுதி அறுவடைக்குப் பிறகு வீணாகிறது.

**பொறியியல் தீர்வுகள்**

- குளிர்சாதன சேமிப்பு
- கட்டுப்படுத்தப்பட்ட வளிமண்டல கிடங்குகள்
- நவீன பதப்படுத்தல் தொழில்நுட்பங்கள்
- மேம்பட்ட போக்குவரத்து வசதிகள்

**பயன்கள்**

- உணவு இழப்பு குறைதல்
- சந்தை மதிப்பு உயர்வு
- உணவுப் பாதுகாப்பு மேம்பாடு

**7. வேளாண் இயந்திரமயமாக்கல்**

நவீன இயந்திரங்கள் மூலம் உற்பத்தித் திறன் மற்றும் செயல் திறனை அதிகரிக்க முடிகிறது.

**நன்மைகள்**

- தொழிலாளர் பற்றாக்குறை தீர்வு
- நேரச் சேமிப்பு
- அதிக உற்பத்தி

**தமிழ்நாட்டில் சமீபத்திய வேளாண் பொறியியல் புதுமைகள்**

செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் IoT அடிப்படையிலான ஸ்மார்ட் பாசன அமைப்புகள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU) மற்றும் பல ஆராய்ச்சி நிறுவனங்கள் மண் ஈரப்பத சென்சார், வானிலை கண்காணிப்பு கருவி மற்றும் IoT தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி தானியங்கி நீர்ப்பாசன முறைகளை ஊக்குவித்து வருகின்றன. இம்முறையில் பயிருக்கு தேவையான அளவு நீர் மட்டுமே வழங்கப்படுவதால் 30-40% வரை நீர் சேமிக்கப்படுகிறது.

வாழை சாகுபடியில் ஸ்மார்ட் வேளாண்மை திருச்சியில் உள்ள ICAR National Research Centre for Banana நிறுவனம் AI, IoTமற்றும் ஸ்மார்ட்போன் அடிப்படையிலான கண்காணிப்பு முறை களை வாழை சாகுபடியில் அறிமுகப்படுத்தியுள்ளது. இது நோய் கண்காணிப்பு, துல்லிய நீர்ப்பாசனம் மற்றும் மகசூல் அதிகரிப்புக்கு உதவுகிறது.

**உயிரி வாயு மற்றும் வேளாண் கழிவு ஆற்றல் தொழில்நுட்பம்**

கோயம்புத்தூரில் உள்ள Agricultural Engineering College and Research Institute மற்றும் தொடர்புடைய ஆராய்ச்சி மையங்கள் உயிரி வாயு அடிப்படையிலான எரிசக்தி மற்றும் கரிம உர உற்பத்தி தொடர்பான புதிய தொழில்நுட்பங்களை மேம்படுத்தி வருகின்றன. இது வேளாண் கழிவுகளை வளமாக மாற்ற உதவுகிறது.

**காலநிலை–நுண்ணறிவு (Climate Smart) சந்தைகள்**

திருச்சியில் உள்ள Gandhi Market சந்தையை கார்பன்–நியூட்ரல் சந்தையாக மாற்றும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதில் மழை நீர் சேகரிப்பு, சூரிய ஆற்றல், கழிவு மேலாண்மை மற்றும் ஆற்றல் திறன் மேம்பாடு போன்ற அம்சங்கள் அடங்கும்.

**காலநிலை தாங்கும் இறால் வளர்ப்பு தொழில்நுட்பம்**

சென்னைக்கு அருகிலுள்ள ICAR-CIBA நிறுவனம் "Super-Intensive Precision Shrimp Farming System" எனும் புதிய தொழில் நுட்பத்தை உருவாக்கியுள்ளது. இதில் Smart Feeding, Intelligent Aeration, குறைந்த நீர் பயன்பாடு மற்றும் அதிக உற்பத்தி ஆகியவை உள்ளன. இது காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை குறைக்கும் புதுமையான பொறியியல் அணுகுமுறையாகும்.

**எதிர்கால வாய்ப்புகள்**

எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவு, ரோபோடிக்ஸ், Internet of Things (IoT), Digital Agriculture மற்றும் Big Data Analytics போன்ற தொழில்நுட்பங்கள் உணவுப் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும்.

‘காலநிலை மாற்றத்தை வெல்வோம்; வேளாண் பொறியியலால் உணவுப் பாதுகாப்பை நிலைநிறுத்துவோம்.‘

கட்டுரை ஆசிரியர் : ***Er.S.சுகுமார் M.E., உதவி பேராசிரியர், வேளாண்மைப் பொறியியல் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி. மின்னஞ்சல் : sukumarsubramani2002@gmail.com.***



கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333